| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதிஅறிக்கை தாக்கல்** | : | 12.08.2025 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 10.08.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 18.08.2025 | **விசாரணை காலம்** | : | 11 மாதங்கள் 23 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மேட்டூர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.2(முகூபொ)

**2026 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10–ம் தேதி திங்கட்கிழமை**

**DVC.16/2025**

**CNR No. TNSA18– 003213–2025**

**1) தேன்மொழி (31), க/பெ.மெய்யழகன்**

**2) மைனர்.அகிலேஷ் த/பெ.மெய்யழகன்**

(2ம் மனுதாரருக்கு பாதுகாவலராக அவரது தாயார் தேன்மொழி)

வீட்டு முகவரி கதவு எண்.NTQ–17, அண்ணாநகர், சேலம்கேம்ப்,

மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம். **...மனுதாரர்கள்**

**–எதிர்–**

**1. மெய்யழகன் (31) த/பெ.ஆறுமுகம்**
**2. ஆறுமுகம் (65) த/பெ. கருப்பண்ணன்,**
**3. மகாதேவி (60) க/பெ. ஆறுமுகம்**
**4. கவிதா (32) த/பெ.ஆறுமுகம்**
1 முதல் 4 எதிர்மனுதாரர்களின் முகவரி 3/269 கல்லாங்காட்டு வளசு, அன்னை சத்யாநகர், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம். **..எதிர்மனுதாரர்கள்**

இந்த மனுவில் மனுதாரர்கள் தரப்பிற்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. S.செந்தில்குமார்** அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பிற்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திருமதி.K.கோகிலவாணி** அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. **மனுவின் சுருக்கம்:** இந்த மனுவில் மனுதாரரும் முதலாம் எதிர்மனுதாரரும் கணவன் மனைவி ஆவார்கள். இருவருக்கும் கடந்த 12.9.2018–ஆம் தேதி குமாரபாளையம், கோட்டைமேடு, பத்ரகாளியம்மன் கோவிலில் இந்து சமய முறைப்படி திருமணம் நடைபெற்று, முதலாம் எதிர்மனுதாரர் மெய்யழகன் வீட்டில் ஒன்றாக குடும்பம் நடத்தி வந்துள்ளனர். மேலும் இந்த மனுவில் இரண்டாவது மற்றும் மூன்றாவது மனுதாரரகளான ஆறுமுகம் மற்றும் மகாதேவி ஆகிய இருவரும் மேற்படி மனுதாரரின் மாமனார் மற்றும் மாமியார் ஆவார்கள். இந்த மனுவில் நான்காவது எதிர்மனுதாரர் மேற்படி கவிதா முதலாவது எதிர்மனுதாரரின் சகோதரி ஆவார். மேற்படி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மனுதாரர் தன்னை எதிர்மனுதாரர்கள், அவர்களது வீட்டில் இருந்த காலத்தில் பல வகையில் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்தியதாகவும், தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அடித்ததாகவும், வேறொரு நபருடன் தொடர்பு வைத்து இருப்பதாக சொல்லி அவதூறு ஏற்படுத்தியதாகவும், உள்ளிட்ட பல நிகழ்வுகளை கூறி, பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை சட்டத்தின் பிரிவு 12–ன் கீழ் நிவாரணங்களைக் கேட்டு இந்த மனுவை கடந்த 12.08.2025–ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

**மனு விசாரணைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றியான விவரங்கள்**

2. மேற்படி தாக்கல் செய்யப்பட்ட மனு இந்த நீதிமன்றத்தின் போக்குக்கு எடுக்கப்பட்டு இந்த வழக்கின் நான்கு எதிர்மனுதாரர்களுக்கும் எதிராக விசாரிக்க கூடிய வழக்கு இருப்பதாக தீர்மானித்து மேற்படி மனுவனை இந்த நீதிமன்றம் D.V.C. No. 16 of 2025 என்ற எண்ணில், கடந்த 18.08.2025–ஆம்

தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

**அறிவிப்பு அனுப்புதல் மற்றும் எதிருரை**

3. மேற்படி அனுப்பப்பட்ட அறிவிப்பின் பேரில் முன்னிலையான எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையை கடந்த 24.11.2025–ஆம் தேதி தாக்கல் செய்துள்ளனர்.

4. **எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:**

a) மேற்படி எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கும் தங்களுக்கும் உள்ள உறவு முறையை மறுக்கவில்லை. மற்றபடி மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது முன்வைத்த ஒவ்வொரு குற்றச்சாட்டையும் தனித்தனியாக மறுத்துள்ளனர். மேலும் உண்மையில் கடந்த 2020 ஆம் வருடம் மே மாத இறுதியில் கொரோனோ தொற்று ஏற்பட்டு லாக்டவுன் சமயத்தில் மனுதாரர் முதலாம் எதிர்மனுதாரருக்கு போன் செய்து தன்னை வந்து அழைத்துச் செல்லவில்லை என்றால் தனது பெற்றோர் தன்னை எப்போதுமே உன்னுடன் வாழ விட மாட்டார்கள் என்று கூறியதன் அடிப்படையில் முதலாம் எதிர்மனுதாரர் மனுதாரர் அழைத்து வர சேலம் கேம்ப் சென்று மனுதாரரின் வீட்டுக்குச் செல்லாமல் வெளியே நின்று உள்ளார். குழந்தையை எடுத்துக்கொண்டு குழந்தை பிறந்த 11 வது மாதம் கழித்து மனுதாரர் முதலாம் எதிர்மனுதாரருடன் குமாரபாளையத்தில் உள்ள அவரது வீட்டுக்கு வந்து ஒன்றரை மாதம் சுமூகமான முறையில் வாழ்ந்து

வந்துள்ளார் .அந்தசமயத்தில் மனுதாரரின் நகைகளைக் கொடுத்து, குழந்தை பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடியதாக சொல்லப்படும் சங்கதிகள் பொய்யானது. முதலாவது எதிர் மனுதாரர் தனது சொந்தச்செலவில் தனது மகனின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடியுள்ளார்.

b) உண்மையில் எதிர் மனுதாரர் ஒரு நாள் வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது மனுதாரர் தனது செல்போன் மூலம் அவரது உறவினர் ஒருவரிடம் இந்த கிழவன் கிழவியும் என்னிடம் காலில் விழுந்து கெஞ்சி கேட்டு இங்கு வரும்படி கூறியதால் தான் நான் இங்கே வந்ததாக குறுஞ்செய்தி அனுப்பிக்கொண்டு இருந்து உள்ளார். இது பற்றி முதலாம் எதிர்மனுதாரர் என்னை வந்து கூட்டிச் செல் என்று கூறிவிட்டு இப்போது எதற்காக எனது பெற்றோர் மீது புகார் சொல்கிறாய் இன்றும் எனது பெற்றோர்கள் உன்னிடம் வந்துவிடு என்று காலில் விழுந்து கெஞ்சினார்களா என்று கேட்டு இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது மேற்படி சம்பவத்தில் இருவரும் தகாத வார்த்தைகளால் பேசி திட்டி இருவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறி அடித்துக்கொண்டு சண்டையிட்டதில்தான் மனுதாரருக்கு அடிபட்டு மூக்கில் ரத்தம் வந்துள்ளது. மேற்கண்டவாறு முதலாம் எதிர் மனுதாரர் தனக்கும் தனது மனைவிக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சனைகள் மற்றும் சண்டைகளைக் குறிப்பிட்டு எதிர் உரை தாக்கல் செய்துள்ளார்.

c) மேலும் இந்த மனுவானது, எப்படியாவது பழிவாங்கி துன்புறுத்த வேண்டும்

என்ற எண்ணத்தில் நடக்காத சம்பவங்களை நடந்ததாகச் சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அதற்கு இழப்பீடாக ரூபாய் 5 லட்சம் பணமும், முதலாம் மனுதாரர் மற்றும் அவரது குழந்தைக்கும் மாதம் ரூபாய். 30,000/– வாழ்க்கை பொருள் உதவித் தொகை வேண்டும் என்றும், மனுதாரருக்கு திருமணத்தின்போது போட்ட நகைகள் மற்றும் பண்ட பாத்திரங்களை திரும்ப ஒப்படைக்க வேண்டும் எனவும் பொய்யான சங்கதிகளைக் கொண்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவின் முதல் மனுதாரருக்கு திருமணம் நடைபெற்றது முதற்கொண்டு அவரது அம்மாவின் துர்போதனைகளை கேட்டுக்கொண்டு, முதலாம் எதிர்மனுதாரருடன் சந்தோசமான முறையில் வாழாமல் அவரது பெற்றோர் வீடே கதி என்று அவரது வீட்டிலேயே தான்தோன்றித்தனமாக இருந்து வந்துள்ளார். ஆகவே, மேற்படி எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீட்டு தொகைபெற மனுதாரர் அருகதையற்றவர் ஆவார். மேலும் முதலாம் மனுதாரர், தற்பொழுது எந்த விதமான வருமானமும் இல்லாமல் சிரமமான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாக குறிப்பிட்ட சங்கதிகளை பொய்யானது என்று எதிர் மனுதாரர்கள் கடுமையாக மறுக்கிறார்கள். எனவே எதிர் உரையில் குறிப்பிட்ட காரணங்களுக்காக மனுதாரர்கள் தாக்கல் செய்த இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிர்உரையில் எதிர்மனுதாரர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரங்கள்**

5. இந்த மனுவின் மனுதாரர்கள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை

பாதுகாக்கும் சட்டம், 2005, –ன் படி, அதன் சட்டப்பிரிவுகளின் கீழ்கண்ட பரிகாரங்களை கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

a) **சீர்வரிசைப் பொருட்களை திரும்ப ஒப்படைப்பு உத்தரவு ( பிரிவு 19(8)) –** எதிர்மனுதாரர்கள் முதல் மனுதாரரிடம் இருந்து பிடுங்கி வைத்துள்ள, அவருக்கு அவரது பெற்றோர்கள், அவருக்கு சீர்வரிசையாகக் கொடுத்த இந்த மனுவில் குறிப்பிட்ட பட்டியலில் காணப்படும் மொத்தம் 1 ½ பவுன் தங்க நகைகளையும் சீர்வரிசை சாமான்களையும் முதல் மனுதாரருக்கு திரும்ப எதிர்மனுதாரர்கள் ஒப்படைக்க உத்தரவிடவேண்டும்.

b) **குடியிருப்பு உத்தரவு (பிரிவு 19(f)):** மனுதாரர்களுக்கு வசிப்பதற்கு வீடு இல்லாததால் மனுதாரர்கள் வசிப்பதற்கு 1–ஆம் எதிர்மனுதாரர் வீடு ஏற்பாடு செய்ய உத்தரவிடவேண்டும்.**பண நிவாரண உத்தரவு (பிரிவு 20):** இரண்டு மனுதாரர்களின் உணவு, ஆடை மற்றும் மருத்துவச் செலவுகளுக்காகவும், இரண்டாவது மனுதாரரின் கல்விச்செலவுகளுக்ககாவும், மாதந்தோறும் ரூ.20,000/– முதல் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுத்தரும் வகையில், பிரிவு 20–ன் கீழ் பணநிவராண உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

c) **இழப்பீட்டு உத்தரவு (பிரிவு 22):** முதல் எதிர் மனுதாரர் முதலாம் மனுதாரரை திருமணம் செய்துகொண்டு எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் நிராகரித்து வரும் நிலையில் முதலாம் மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உண்டான இழப்பீடாக முதலாம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூபாய் ஐந்து லட்சம் இழப்பீட்டுத்தொகையாக ரூ.5,00,000/– கொடுக்க உத்தரவிடவேண்டும்.

d) **நிறைவேற்று உத்தரவு (பிரிவு 19(7)):** மேற்கண்டவாறு இந்த நீதிமன்றம் வழங்கும் உத்தரவுகளை அமல்படுத்தியும், அவற்றை கண்காணிக்கவும் மேட்டூர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் கருமலைக்கூடல் காவல்துறை ஆய்வாளருக்கு உத்தரவிட வேண்டும்.

**சாட்சிய விவாதம் மற்றும் ஆய்வு**

6. இந்த மனுவிசாரணையில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரம் என்னவெனில், மனுதாரர்கள் கோரிய நிவாரணங்களுக்கு உரிமை உடையவர்களா என்பதாகும்.

7. இந்த நீதிமன்றத்தின் கருத்துப்படி, தனித்தனியான நிவாரணங்கள் தொடர்பாக முடிவெடுப்பதற்கு முன்னர், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005–ன் விதிமுறைகளை பயன்படுத்துவதற்குத் தேவையான அத்தியாவசிய அம்சங்கள் போதுமான அளவு நிறுவப்பட்டுள்ளனவா (அல்லது) ஒப்புக்கொள்ளப்பட்டனவா என்பதை முதலில் ஆராய்வது நியாயமானதும் அவசியமானதுமாகும்.

8. **தரப்பினர்களுக்கிடையேயான "குடும்ப உறவு" இருப்பது:** இந்த வழக்கில் முதலாவது மனுதாரர், முதலாவது எதிர்மனுதாரரின் சட்டப்படியான மனைவி என்பதையும், இரண்டாவது மனுதாரர் மேற்படி இருவரின் சட்டப்பூர்வ மகன் என்பதையும் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த ஒப்புதலின் அடிப்படையில், சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு தரப்பினருக்கிடையே குடும்ப உறவு நிலவுவது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

9. **"பொதுவான வீட்டில் கூட்டுக்குடியிருப்பு" இருப்பது:** இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது எதிர்மனுதாரர், முதலாவது மனுதாரரின் கணவர் ஆவார். இரண்டாவது மற்றும் மூன்றாவது எதிர்மனுதாரர்கள் முறையே அவரது மாமனார் மற்றும் மாமியார் ஆவர். நான்காவது எதிர்மனுதாரரான கவிதா, முதலாவது எதிர்மனுதாரரின் உடன்பிறந்த சகோதரி ஆவார்.

10. எதிர்மனுதாரர்கள் நால்வரும் ஒரே முகவரியில் அமைந்துள்ள ஒரே வீட்டில் வசித்து வருவதாகவும், மனுதாரர்கள் அதே வீட்டில் ஒன்றாக வசித்து வந்தனர் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூற்று 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களைப் பொறுத்து மறுக்கப்படாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

11. ஆனால், நான்காவது எதிர்மனுதாரர் கவிதா, 2016ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூரில் உள்ள கண்ணன் ஹோமியோபதி மருத்துவமனையில் உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என ஒரு மருத்துவர் சான்றிதழ் எதிர்உரையின் அங்கமாகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தும், அதனை நிரூபிக்க எவரும் விசாரணை செய்யப்படவோ, சான்றாவணமாகக் குறியீடு செய்யப்படவோ இல்லை.

12. இத்தொடர்பாக, முதலாம் மனுதாரரையே மறுதரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது, நான்காவது எதிர்மனுதாரர் "கோயம்புத்தூரில் வாழ்ந்தார்" எனப் பதிலளித்துள்ளார். இதைத் தொடர்ந்து, நான்காவது எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பும் பின்பும் தொடர்ந்து அங்கேயே பணிபுரிந்ததால், மனுதாரருடன் வாழ்ந்து வந்தார் எனக் கூறுவது பொய்

அல்லவா என மறுதரப்பு வழக்கறிஞர் முன்வைத்த சங்கதிக்கு, "சரி அல்ல" என மனுதாரர் பதிலளித்துள்ளார். இப்பதில், வழக்கறிஞர் முன்வைத்த சங்கதியை மறுத்து, நான்காவது எதிர்மனுதாரர் தம்முடன் வாழ்ந்து வந்தார் என்ற தமது சொந்த மனுக் கூற்றையே மனுதாரர் மீண்டும் உறுதிப்படுத்தியதாகவே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

13. மருத்துவமனை சான்றிதழ் சான்றாவணமாகக் குறியீடு செய்யப்படாததாலும், அதனை உறுதி செய்யும் சுயாதீன ஆதாரம் இல்லாததாலும், நான்காவது எதிர்மனுதாரர் பொதுவான வீட்டில் வசிக்கவில்லை என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை நிரூபிக்க இயலவில்லை.

14. குடும்ப வன்முறை நிகழ்வுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் நிரூபிக்க வேண்டும் என நீதிமன்றம் எதிர்பார்க்க இயலாது; சாத்தியக்கூறுகளின் பெரும்பான்மைகள் என்ற தராதரத்தின் அடிப்படையிலேயே இருதரப்புச் சாட்சியங்களை மதிப்பிட வேண்டும். இதன் அடிப்படையில், நான்காவது எதிர்மனுதாரர் கவிதா தொடர்பாக முதலாம் மனுதாரர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:

a) மூன்றாவது எதிர்மனுதாரருடன் இணைந்து தம்மை அவதூறாகப் பேசியது;

b) கர்ப்பகாலத்தில் வீட்டு வேலைகளைக் கட்டாயப்படுத்தியது;

c) 10.06.2020 அன்று திட்டி அசிங்கப்படுத்தி வீட்டைவிட்டு வெளியேற்றியது;

d) தொலைபேசி மூலம் தொடர்பு குற்றம் சாட்டி மனதளவில் கொடுமைப்படுத்தியது.

15. மேற்படி நான்கு குற்றச்சாட்டுகளும் ஒருபுறம் இருந்தாலும், நான்காவது எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனுவில் கோரப்பட்ட ஒரே பரிகாரம் சீர்வரிசைப் பொருட்களைத் திரும்ப ஒப்படைப்பது தொடர்பானது மட்டுமே ஆகும்.

16. ஆகவே, மேற்படி இருதரப்புச் சாட்சியங்களைப் பரிசீலனை செய்யும்போது, நான்காவது எதிர்மனுதாரர் கவிதா, மனுதாரர்கள் மற்றும் ஏனைய எதிர்மனுதாரர்களுடன் ஒரே பொதுவான வீட்டில் கூட்டுக்குடியிருந்தார் என்பது சாத்தியக்கூறுகளின் பெரும்பான்மையின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட சங்கதி என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. **குடும்ப வன்முறை:** மேற்கண்ட அடிப்படை காரணிகளை தவிர்த்து "குடும்ப வன்முறை" நிகழ்ந்திருப்பது: இதுவே நிரூபிக்கப்பட வேண்டிய முக்கிய குற்றச்சாட்டாகும். சட்டத்தின் பிரிவு 3, "குடும்ப வன்முறை" என்பதை, நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி வரையறை செய்துள்ளது.

a) பாதிக்கப்பட்ட நபரின் உடல்நலம், பாதுகாப்பு, உயிர், உறுப்பு அல்லது மனநிலை/உடல் நலனை தீங்கு விளைவிக்கும் வகையிலோ, காயப்படுத்தும் வகையிலோ அல்லது ஆபத்தில் ஆழ்த்தும் வகையிலோ இருத்தல் – இதில் உடல் ரீதியான, பாலியல் ரீதியான, வாய்மொழி மற்றும் உணர்வு ரீதியான, மற்றும் பொருளாதார ரீதியான துன்புறுத்தல்கள் அடங்கும்; அல்லது

b) சீதனம் அல்லது பிற சொத்து/மதிப்புமிக்க பொருள் தொடர்பான சட்டவிரோத கோரிக்கையை நிறைவேற்றுமாறு பாதிக்கப்பட்ட நபரையோ

அல்லது அவருடன் தொடர்புடைய பிற நபரையோ வற்புறுத்தும் நோக்குடன் துன்புறுத்துதல், தீங்கிழைத்தல், காயப்படுத்துதல் அல்லது ஆபத்தில் ஆழ்த்துதல்; அல்லது

c) மேற்குறிப்பிட்ட (i) அல்லது (ii)–ல் குறிப்பிடப்பட்டுள்ள நடத்தை மூலம் பாதிக்கப்பட்ட நபரையோ அவருடன் தொடர்புடைய பிற நபரையோ மிரட்டும் விளைவை ஏற்படுத்துதல்; அல்லது

d) வேறு எந்த வகையிலும் பாதிக்கப்பட்ட நபருக்கு உடல் ரீதியாகவோ மன ரீதியாகவோ தீங்கு அல்லது காயத்தை ஏற்படுத்துதல்.

e) **விளக்கம் I – "துன்புறுத்தல்" என்பதன் பொருள்:** "உடல் ரீதியான துன்புறுத்தல்," "பாலியல் ரீதியான துன்புறுத்தல்," "வாய்மொழி மற்றும் உணர்வு ரீதியான துன்புறுத்தல்," மற்றும் "பொருளாதார ரீதியான துன்புறுத்தல்" ஆகிய ஒவ்வொன்றும் தனித்தனி வரையறைகளைக் கொண்டுள்ளன என்பதை விளக்கம் I தெளிவுபடுத்துகிறது. இவற்றுள் ஏதேனும் ஒரு வடிவம் நிரூபிக்கப்பட்டாலே பிரிவு 3–ன் கீழான வரையறைக்குள் அடங்குவதற்கு போதுமானது ஆகும்.

f) **விளக்கம் II – தீங்கு நிர்ணயிப்பதற்கான அளவுகோல்:** எந்தவொரு செயல், தவிர்த்தல், செய்கை அல்லது நடத்தை குடும்ப வன்முறையாக அமைகிறதா என்பதை நிர்ணயிக்கும்போது, வழக்கின் ஒட்டுமொத்த உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

18.மேற்கண்டவாறு இந்த வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் நிரூபிக்கப்பட்ட

சூழ்நிலைகளின் அடிப்படையில், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக ஏதேனும் குடும்ப வன்முறைச் செயலைச் செய்துள்ளாரா என்பதை இந்த நீதிமன்றம் இப்போது தீர்மானிக்க வேண்டியுள்ளது.

19. மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் இதுபோன்ற குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் நேரடி சாட்சியத்திற்கு வாய்ப்பு குறைவாக இருக்கும் சூழ்நிலையை எவ்வாறு பரிசீலிப்பது குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Geddam Jhansi v. The State of Telangana, reported in 2025 SCC OnLine SC 263,** வழக்கில் பத்தி எண். 33–ல் கீழ்கண்ட வழிகாட்டுதலை வழங்கி உள்ளது.

a) **குடும்ப வன்முறை வழக்குகளில் உணர்வுபூர்வமான அணுகுமுறையின் அவசியம்:** குடும்பச் சூழலில் நிகழும் உண்மையான கொடுமை மற்றும் வன்முறை சம்பவங்கள் நடைமுறையில் நிகழக்கூடியவையாக இருப்பதால், அவை மிகுந்த உணர்வுபூர்வமான அணுகுமுறையுடன் கையாளப்பட வேண்டும் என்பது தெளிவானது.

b) **குடும்ப வன்முறையின் தனித்தன்மை –** பொது வெளியில் நிகழாத தன்மை குடும்ப வன்முறை பொதுவாக வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நிகழ்கின்றது, பொது வெளியில் நிகழ்வதில்லை. எனவே, இத்தகைய வன்முறை, அண்டை வீட்டாரைத் தவிர, பொது மக்களால் கவனிக்கப்படுவதில்லை.

c) **ஆதாரங்களை முன்வைப்பதில் ஏற்படும் இயல்பான சிரமம்:** இதன்

காரணமாக, குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பாதிக்கப்பட்டவர் புலப்படக்கூடிய சான்றுகளை எளிதில் அளிக்க இயலாமல் போகலாம், மற்றும் நேரடியான சான்றுகளை முன்வைப்பது கடினமான மற்றும் சிரமமான ஒன்றாக இருக்கலாம்; இது குடும்ப வன்முறை நிகழவில்லை என்பதைக் குறிக்காது.

d) **சட்டமியற்றப்பட்ட பின்னணி –** இந்தத் தீங்கு விளைவிக்கும் நடைமுறையைச் சமாளிக்கும் வகையில், **பெண்கள் மீதான குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாப்பு சட்டம், 2005** போன்ற கடுமையான சட்டங்கள், குடும்ப வன்முறை என்பதன் பொருள் மற்றும் எல்லையை மிக விரிவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன.

e) **குற்றவியல் விளைவுகளின் அடிப்படையில் நீதிமன்றங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கவனம்:** நெருங்கிய உறவினர்களால் குடும்பச் சூழலில் இழைக்கப்படும் வன்முறை இப்போது குற்றமாக்கப்பட்டு, குற்றம் இழைப்பவர்கள் மீது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதால், இத்தகைய வழக்குகளைக் கையாளும்போது, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது குறிப்பிட்ட சம்பவங்களுடன் கூடிய தெளிவான குற்றச்சாட்டுகள் உள்ளனவா அல்லது பொதுப்படையான குற்றச்சாட்டுகள் மட்டுமே உள்ளனவா என்பதை ஆராய்ந்து, நீதிமன்றங்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

f) **சட்டத்தின் நோக்கத்திற்கும் அதிகபட்சச் செயலாக்கத்திற்கும் இடையிலான சமநிலை:** குடும்ப வன்முறைக்கு ஆளாகும்

பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற சட்டத்தின் நோக்கமும் கட்டளையும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், குற்றம் இழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்யும் அதேவேளையில், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அல்லது உறவினர்கள் அனைவரும் பாகுபாடின்றி குற்றவியல் வலையில் சிக்க வைக்கப்படக் கூடாது என்பதையும் உறுதி செய்யும் வகையில், ஒரு சமநிலை பேணப்பட வேண்டும்.

20. மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி இந்த வழக்கு சங்கதிகளை பொறுத்து மனுவில் கேட்கப்பட்டுள்ள பரிகாரங்களின் அடிப்படையில் மேற்கண்ட மனுதாரர்கள் ஒன்றாக எதிர்மனுதாரர்களுடன் வசிக்கும் போது நடைபெற்றதாக சொல்லப்படும் குடும்ப வன்முறையை பற்றி பரிசீலனை செய்வது சரியானதாகவும், அவசியமானதாகவும் இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**சீர்வரிசைப் பொருட்களை திரும்ப ஒப்படைப்பு உத்தரவு ( பிரிவு 19(8))**

21. இந்த மனுவில் நான்கு எதிர்மனுதாரர்களுக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட ஒரே ஒரு பரிகாரம், எதிர்மனுதாரர்கள் முதல் மனுதாரரிடமிருந்து பறித்துக் கொண்டுள்ள, அவருடைய பெற்றோர்கள் அவருக்குச் சீர்வரிசையாகக் கொடுத்த, இந்த மனுவில் இணைக்கப்பட்ட பட்டியலில் காணப்படும் மொத்தம் ஒன்றரைப் பவுன் தங்க நகைகளையும் சீர்வரிசைச் சாமான்களையும் முதல் மனுதாரருக்குத் திரும்ப ஒப்படைக்குமாறு உத்தரவிடவேண்டும் என்பதே ஆகும். வேறு அனைத்துப் பரிகாரங்களும் முதலாவது எதிர்மனுதாரரை நோக்கி

மட்டுமே கோரப்பட்டுள்ளன.

22.முதலாம் மனுதாரர் தான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில், தன்னுடைய திருமணத்தின்போது தன் பெற்றோர்கள் சீர்வரிசையாகக் கொடுத்த அரைப்பவுன் தோடு, ஒரு பவுன் செயின், ஒரு கட்டில், ஒரு மெத்தை மற்றும் ஒரு குத்துவிளக்கு ஆகியவை தற்போது எதிர்மனுதாரர்கள் வசம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இச்சங்கதி தொடர்பாகக் குறுக்கு விசாரணையின்போதும் அவர் இதே கருத்தினைத் தெரிவித்துள்ளார். எனினும், மேற்படி சீர்வரிசைப் பொருட்கள் கொடுக்கப்பட்டதற்கான ஆவணச் சான்றுகள் எவையும் மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்படவில்லை. மேலும், முதலாவது எதிர்மனுதாரரைத் தவிர மற்ற எதிர்மனுதாரர்கள் யாரும் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகிச் சாட்சியம் அளிக்கவில்லை.

23.முதலாவது எதிர்மனுதாரரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, ஒன்றரைப் பவுன் அளவுள்ள தங்க நகைகள் சீர்வரிசையாகக் கொடுக்கப்பட்டது என்பதையும், பீரோ, கட்டில், மெத்தை ஆகிய வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் கொடுக்கப்பட்டது என்பதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனினும், மேற்படி தங்க நகைகளைத் தவிர மற்ற பொருட்கள் தற்போது அவர் வசம் உள்ளதா என்பது குறித்து அவரிடம் எந்தக் கேள்வியும் கேட்கப்படவில்லை; அதன் அடிப்படையில் அவர் அதற்கான ஒப்புதலையும் அளிக்கவில்லை. மனுவில் குறிப்பிடப்பட்ட குத்துவிளக்கு தொடர்பாகவும் முதலாம் எதிர்மனுதாரரைக் குறுக்கு விசாரணை செய்யும்போது எந்தக் கேள்வியும் எழுப்பப்படவில்லை. மேற்படி சீர்வரிசைப் பொருட்கள் தொடர்பாக

மனுதாரரைத் தவிர வேறு எந்தச் சாட்சியும் மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை. ஆகவே, கட்டில், மெத்தை, குத்துவிளக்கு, பீரோ ஆகிய சீர்வரிசைப் பொருட்கள் எதிர் மனுதாரர்கள்வசம் உள்ளது என்பதை பொறுத்தவரை மனுதாரர் தரப்பில் ஆவணச் சாட்சியமோ வாய்மொழிச் சாட்சியமோ இல்லை.

24.மேற்படி சீர்வரிசையாகக் கொடுக்கப்பட்ட ஒன்றரைப் பவுன் தங்க நகையை அடமானம் வைத்ததாக முதலாம் மனுதாரரும் இரண்டாவது எதிர்மனுதாரரும் அவரவர் சாட்சியத்தில் தெரிவித்துள்ளனர். இதில் எழும் கேள்வி, அடமானம் வைத்துப் பெறப்பட்ட தொகையை எதிர்மனுதாரர் வைத்துக்கொண்டாரா அல்லது மனுதாரர்கள் வைத்துக்கொண்டனரா என்பதே ஆகும். மனுதாரர், மேற்படி அடமானத் தொகையைத் தன் கணவரான முதலாம் மனுதாரரின் கணவர் எடுத்துச் சென்றுவிட்டதாகக் குறுக்கு விசாரணையின்போது தெரிவித்துள்ளார். மேற்படி நகையை அடமானம் வைத்துத் தன் மகனின் பிறந்தநாளைக் கொண்டாடியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அடமானத் தொகையான ரூ.34,000/-ல் இருந்து முழுத் தொகையையும் எடுத்துச் சென்றுவிட்டதாக எதிர்மனுதாரர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது, அது தொடர்பாக ஒரு ஒலிப்பதிவு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், அந்தத் தொகையிலிருந்து ரூ.1,000/- மட்டுமே எடுத்துச் சென்றதாகவும், மீதமுள்ள ரூ.33,000/-ஐ வைத்துவிட்டுச் சென்றதாகவும் மனுதாரர் குறுக்கு விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

25.முதலாம் எதிர்மனுதாரருக்கும் முதலாம் மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற

அலைபேசி உரையாடல்கள் மற்றும் வாட்ஸ்அப் செய்திகள் இவ்வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், அவற்றை நிரூபிக்க உரிய சாட்சியை விசாரணை செய்யவோ, பாரத சாட்சிய சட்டப் பிரிவு 65–B கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றிதழைக் குறியீடு செய்யவோ இறுதிவரை போதிய வாய்ப்புக்கள் இருந்தும் முயற்சி செய்யவில்லை. எனவே, மேற்படி சாட்சியங்களை இந்த நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இயலாது என்றும், மேற்படி சட்ட நெறிமுறைகளை பின்பற்றி சான்றளித்தவரை சாட்சியாக விசாரணை செய்யாத குறைபாடுகளின் அடிப்படையில் மேற்கண்ட மின்னணுச் சாட்சியங்களை ஆவணமாகக் குறியீடு செய்ய இயலாது என்றும் இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

26.மேற்படி தங்க நகையை மீட்க எதிர்மனுதாரர் அழைத்தார் என்றும், நகை மூழ்கினால் பரவாயில்லை, அடமானத்தை மூழ்கடித்தது தானே எனக் கேள்விகள் கேட்கப்பட்டதற்கு, கையில் குழந்தையை வைத்துக்கொண்டு வர முடியாது, நீயே மீட்டுக்கொடு என்று சொன்னதாக முதலாம் மனுதாரர் குறுக்கு விசாரணையின்போது தெரிவித்துள்ளார். மேற்படி நகை கடன் திரும்பச் செலுத்தப்படாததால் மூழ்கடிக்கப்பட்டது என்ற சங்கதி மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. இந்நிலையில், கடனில் மூழ்கடிக்கப்பட்ட நகையைத் திரும்ப ஒப்படைக்க உத்தரவிட இயலாது என இந்த நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் மேற்படி நகை அடமானத்தில் மூழ்கடிக்கப்பட்ட சங்கதி குறித்து, இந்த மனுவில் கேட்கப்பட்டுள்ள இழப்பீடு பரிகாரங்களைப் பொறுத்து பரிசீலனை செய்வதே சரியானது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

27.மேற்கண்ட சீர்வரிசைப் பொருட்களைத் தங்கள் வசம் மற்ற எதிர்மனுதாரர்கள் வைத்துக்கொண்டு தர மறுக்கின்றனர் என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டிருந்தாலும், அதற்கான சங்கதிகளைச் சாத்தியக்கூறுகளின் பெரும்பான்மை அடிப்படையில் மனுதாரர்களால் இந்த நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்ட இயலவில்லை. எனவே, மேற்கண்ட சீர்வரிசைப் பொருட்களைத் திரும்ப ஒப்படைக்கும் பரிகாரத்தைப் பொறுத்தவரை இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**மனுதாரர்கள் மற்றும் முதலாம் எதிர்மனுதாரரைத் தவிர மற்ற எதிர்மனுதாரர்களுக்கு இடையேயான குடும்ப வன்முறை நிகழ்வுகள்**

28.இம்மனு முழுமைக்குமான குடும்ப வன்முறைக் குற்றச்சாட்டுகள் நான்கு எதிர்மனுதாரர்கள் அனைவர் மீதும் வைக்கப்பட்டிருந்தபோதிலும், முதலாவது எதிர்மனுதாரரைத் தவிர மற்ற மூன்று எதிர்மனுதாரர்களுக்கு எதிராக, மேலே இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ள சீர்வரிசைப் பொருட்களைத் திரும்ப ஒப்படைப்பது தொடர்பான பரிகாரத்தைத் தவிர வேறு எந்தப் பரிகாரமும் கோரப்படவில்லை. ஆகவே, அவர்கள் மீதான குடும்ப வன்முறைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இம்மனுவில் தனியாக எவ்வித தீர்ப்பும் வழங்கப்படத் தேவையில்லை; அக்குற்றச்சாட்டுகள் இதன் மூலம் மறுக்கப்படுவதாகவோ அல்லது நிரூபிக்கப்பட்டதாகவோ கருதப்படக்கூடாது, மாறாக, கோரப்பட்ட பரிகாரம் இல்லாத காரணத்தினால் மட்டுமே அவை இம்மனுவின் தீர்வுக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன. இத்தீர்ப்பு, முதலாவது எதிர்மனுதாரரைத் தவிர மற்ற எதிர்மனுதாரர்கள் மீதான குடும்ப வன்முறைக்

குற்றச்சாட்டுகள் தொடர்பாக மனுதாரர்கள் எடுக்கக்கூடிய வேறு எந்தச் சட்டப்பூர்வ நடவடிக்கைக்கும் தடையாக அமையாது என்பதையும் இந்த நீதிமன்றம் தெளிவுபடுத்துகின்றது. இந்நிலையில், தற்போது மீதமுள்ள பரிகாரங்களைப் பொறுத்தவரை, மனுதாரர்களுக்கும் முதலாம் எதிர்மனுதாரருக்கும் இடையேயான குடும்ப வன்முறை நிகழ்வுகளை மட்டுமே இந்த நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கின்றது.

**குடும்ப வன்முறை நிகழ்ந்தது தொடர்பான சாட்சிய நிரூபணம்**

29.மேற்படி மனுவின் முதலாம் மனுதாரர், பல்வேறு காலகட்டங்களில் பலவகையான குடும்ப வன்முறை நிகழ்வுகளுக்கு ஆட்படுத்தப்பட்டதாகத் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனினும், மனுதாரரைத் தவிர வேறு எந்த நேரடிச் சாட்சியும் அவர் தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை. குடும்ப வன்முறை நிகழ்வுகள் பெரும்பாலும் இரு தரப்பினர் மட்டுமே இருக்கும் தனிப்பட்ட இல்லச் சூழலில் நிகழ்வதால், அத்தகைய நிகழ்வுகளுக்கு மூன்றாம் நபர் நேரடிச் சாட்சியாக இருப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவே என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. இதே தராதரம் முதலாம் எதிர்மனுதாரரின் நிலைக்கும் ஒருங்கே பொருந்தும் என்பதை இந்த நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது; ஏனெனில், தாமும் மனுதாரரும் ஒன்றாக வாழ்ந்த காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக முதலாம் எதிர்மனுதாரரும் மூன்றாம் நபர் சாட்சியமின்றித் தமது சொந்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இருதரப்புச் சாட்சிகளும் மறுதரப்பு வழக்கறிஞரால்

குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர் என்பதால், இருவரின் வாக்குமூலங்களும் சமமான நடைமுறைச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டவையே ஆகும்.

30.ஆகவே, மேற்படி இருதரப்புச் சாட்சியங்களையும் ஒருங்கிணைத்துப் பரிசீலனை செய்து, "சாத்தியக்கூறுகளின் பெரும்பான்மை" எனும் ஆதாரச் சுமைத் தராதரத்தை – இது மனுதாரர் தரப்பிற்கும் எதிர்மனுதாரர் தரப்பிற்கும் சமமாகப் பொருந்தும் என்ற அடிப்படையில் – கீழ்க்காணும் ஒவ்வொரு நிகழ்விற்கும் தனித்தனியாகப் பொருத்திக் காண்பதன் மூலம், அந்நிகழ்வுகள் நடைபெற்றிருப்பதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

31.**முதல் நிகழ்வு:** முதலாம் மனுதாரர் தமது சாட்சியத்தில், 2018–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தமது தாயாரைப் பார்க்க சேலம் கேம்ப் செல்ல வேண்டும் எனக் கேட்டதற்கு, முதலாம் எதிர்மனுதாரர் தம்மைத் திட்டியதோடு மட்டுமல்லாமல், தமது தாயாரையும் தகாத வார்த்தைகளால் திட்டி, மனத்தளவில் கொடுமைப்படுத்தியதாகச் சாட்சியம் அளித்துள்ளார்.

a) இது தொடர்பாக எதிர்மனுதாரர் தமது உறுதிமொழி ஆவணத்தில் இரு வேறுபட்ட விவரங்களைத் தெரிவித்துள்ளார். முதலாவதாக, மனுதாரர் திருமணத்திற்கு முன்பே சென்னையில் ஒரு கைபேசி நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் தரணி என்பவர் தம்மைக் காதலிப்பதாகக் கூறியபோது அதை ஏற்க மறுத்து நண்பர்களாக இருப்போம் எனக் கூறியதன் அடிப்படையில் அவருடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், சந்தோஷ் என்பவருடனும் பழகி வந்ததாகவும், இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக்

பக்கங்களில் பல ஆண் நபர்களுடன் உரையாடி வந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரர் வீட்டிற்கு அருகில் வசிக்கும் தொப்பிக்காரன் என்பவர் தம்முடன் இணக்கமாகிக் கொண்டு வாழுமாறு தவறான முறையில் அழைப்பு விடுத்ததாகவும், இத்தகைய விபரங்களைப் பெண் பார்க்க வந்த சமயத்திலேயே மனுதாரர் தமக்கு ஒளிவு மறைவின்றி தெரிவித்ததாகவும் எதிர்மனுதாரர் கூறியுள்ளார். இரண்டாவதாக, திருமணத்திற்குப் பின்னர் ஒருமுறை கைபேசியில் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய் எனக் கேட்டதற்கு, தரணி மற்றும் தம்பி முறையிலான சந்தோஷத்துடன் பேசிக் கொண்டிருப்பதாக மனுதாரர் தெரிவித்ததாகவும், அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம் எனக் கண்டிப்பாகக் கூறியதை மனுதாரர் ஏற்க மறுத்து, பணி முடித்து வரும் நேரத்திலும் கைபேசியில் மூழ்கிக் கிடந்ததாலேயே மனுதாரரிடமிருந்து கைபேசியைப் பிடுங்கி உடைத்ததாக எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டு தெரிவித்துள்ளார்.

b) இவ்விரு விவரங்களையும் இந்த நீதிமன்றம் தனித்தனியான ஆதார மதிப்பீட்டின் அடிப்படையில் பரிசீலிக்கிறது. கைபேசியைப் பிடுங்கி உடைத்த சம்பவம் எதிர்மனுதாரரின் சொந்த உறுதிமொழி ஆவணத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒரு உண்மையாகும் என்பதால், அது தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடும் வகையிலான செயலாக நிலைநிறுத்தப்படுகிறது.

c) இந்நிலையில், எதிர்மனுதாரரின் சந்தேகத்திற்கும் அவரது நடத்தைக்கும் இடையேயான உறவு முறையை நீதிமன்றம் பின்வருமாறு அணுகுகிறது:

மனுதாரர் திருமணத்திற்குப் பின்னரும் பிற ஆண்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பது நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டாக இருப்பினும், அது எதிர்மனுதாரரின் சந்தேகத்திற்கு ஒரு தூண்டுதலாக அமைந்திருக்கக்கூடும் என்பதை நீதிமன்றம் மறுக்கவில்லை. எனினும், சந்தேகத்திற்கான காரணம் இருந்திருந்தாலும், அதற்கான எதிர்மனுதாரரின் பதிலளிப்பு, அதாவது மனுதாரரின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிட்டு நண்பர்களுடன் பேசக்கூடாது எனத் தடை விதித்தது, மேலும் குறிப்பாக அவரது கைபேசியைப் பிடுங்கி உடைத்தது என்பது சந்தேகத்திற்குரிய காரணத்தை விடப் பன்மடங்கு அதிகமான நடவடிக்கையாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

d) எனவே, சந்தேகத்திற்கான காரணம் இருந்ததா இல்லையா என்பதைக் காட்டிலும், அச்சந்தேகத்திற்கு எதிர்மனுதாரர் அளித்த பதிலளிப்பின் தன்மையே இந்த நீதிமன்றத்தின் முடிவுக்கு அடிப்படையாக அமைகிறது. மேலும், முதலாம் மனுதாரர் திருமணத்திற்கு முன்பே தெரிவித்திருந்த தனிப்பட்ட விபரங்களைத் தமது மனதில் வைத்துக்கொண்டு, குடும்ப வாழ்வில் முதலாம் எதிர்மனுதாரர் நம்பிக்கையின்றி நடந்துகொண்டதையும் இது எடுத்துக்காட்டுவதாக நீதிமன்றம் கருதுகிறது. இது மேற்படி உணர்வுரீதியான குடும்ப வன்முறை மற்றும் வாய்மொழியான குடும்ப வன்முறை ஆகியவற்றின் வரம்பிற்குள் அடங்குவதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது

32. **இரண்டாம் நிகழ்வு:** இரண்டாவது சம்பவம் தொடர்பாக, முதலாம் மனுதாரர் தமது

உறுதிமொழி ஆவணத்தில், முதலாம் எதிர்மனுதாரருடன் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்யும்போது சாலையில் வருபவர்களைப் பார்த்ததற்காக, "நீ அவனுடன் போவதற்குப் பார்க்கிறாயா" என்று எதிர்மனுதாரர் கடுமையான வார்த்தைகளால் தம்மைத் திட்டிக் கொடுமைப்படுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

a) இச்சம்பவம் நடைபெற்றது என்பதை எதிர்மனுதாரர் மறுக்கவில்லை என்றபோதிலும், சம்பவம் நடைபெற்ற விதம் தொடர்பாகத் தமது எழுத்துப்பூர்வமான உறுதிமொழி ஆவணத்தில் வேறுபட்ட விளக்கம் அளித்துள்ளார். அதன்படி, தமக்குப் பின்னால் அமர்ந்து பயணித்த மனுதாரர், எதிரே வந்த ஒரு நபர் தம்மையே பார்ப்பதாகக் கூறியதாகவும், அதற்கு மறுமொழியாகத் தாம் "நீ எதற்காக அந்த நபரைப் பார்க்கிறாய், அவரிடம் செல்ல வேண்டுமா சொல், நான் வண்டியை நிறுத்தி அவருடன் ஏற்றி விடுகிறேன்" எனக் கூறியதாகவும், இக்கூற்றை மனுதாரர் பிரித்து, "சாலையில் போவோர் வருவோர் அனைவரிடமும் தம்மை அனுப்புவதாகக் கூறினார்" என உண்மைக்குப் புறம்பான முறையில் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார்.

b) மேற்படி சாலையில் செல்லும் ஒரு நபர் தம்மைப் பார்ப்பதாக மனுதாரர் தெரிவித்த ஒரு சாதாரண சங்கதியை ஏற்றுக்கொள்ள முடியாமல், அதற்குப் பதிலாக "திரும்ப அந்த நபருடன் செல்கிறாயா" எனப் பெண் ஒருவரை நோக்கிக் கூறியிருப்பது, மிகவும் உணர்வுரீதியாகவும் பெண் ஒருவரை மனத்தளவில் பாதிக்கும் விதத்திலும் அமைந்த குடும்ப வன்முறை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

33.**மூன்றாம் நிகழ்வு:** மனுதாரர் தமது சாட்சியத்தில், குழந்தையின் முதல் பிறந்தநாள் விழாவைக் கொண்டாட வேண்டி முதலாம் மனுதாரரிடமிருந்து அனைத்துப் நகைகளையும் எதிர்மனுதாரர் வாங்கிச் செலவழித்துவிட்டதாகவும், இது தொடர்பாக முதலாம் மனுதாரரைக் கேட்டதற்கு அவரை அடித்ததில் மூக்கில் ரத்தம் வந்ததாகவும், முகத்தில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

a) இச்சம்பவத்திற்கு மறுப்பாக, முதலாம் எதிர்மனுதாரர் தமது உறுதிமொழி ஆவணத்தில், அன்று தாம் பணி முடித்துக் கொண்டு வரும்போது, முதலாம் மனுதாரர் தமது உறவினர் ஒருவரிடம் "இந்தக் கிழவனும் கிழவியும் என்னிடம் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டதால்தான் தாம் இங்கே வந்ததாகக்" கூறியதை மொபைல் போனில் பகிர்ந்து கொண்டிருந்ததைக் கண்டு மிகுந்த அதிர்ச்சி அடைந்ததாகவும், அதன் காரணமாக மனுதாரர்களிடம் "ஏன் இப்படிப் பொய்யான சங்கதிகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறாய், நீதான் போன் செய்து என்னை வந்து கூட்டிச் செல் என்று கூறிவிட்டு இப்போது எதற்காக எனது பெற்றோர் மீது புகார் கூறுகிறாய், அவர்கள் உன்னிடம் வந்து காலில் விழுந்து கெஞ்சினார்களா" எனக் கேட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டு, இருவரும் தகாத வார்த்தைகளால் பரஸ்பரம் திட்டிக் கொண்டு, ஒருவரையொருவர் இழுத்துத் தள்ளி மாறி மாறி அடித்துக்கொண்டு சண்டையிட்டதாகவும், அதில் மனுதாரருக்கு அடிபட்டு மூக்கில் ரத்தம்

வந்ததாகவும், உடனடியாக அவரை அழைத்துச் சென்று மருத்துவம் பார்த்துவிட்டு வீட்டிற்குச் சென்றதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

b) மேற்கண்ட நிகழ்வில் முதலாம் எதிர்மனுதாரருக்கு எவ்வித காயமும் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை. அதேசமயம், முதலாம் மனுதாரருக்கு அடிபட்டு, உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அளவிற்குக் காயம் ஏற்பட்டுள்ளது என்பதை முதலாம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். முதலாம் எதிர்மனுதாரர் முதலாம் மனுதாரரால் தாக்கப்பட்டதற்கு எவ்வித சாட்சியமும் இல்லாத சூழ்நிலையில், மேற்கண்ட பிரச்சினையில் முதலாம் எதிர்மனுதாரரே முதலாம் மனுதாரரை ரத்தக் காயம் ஏற்படும் அளவிற்குத் தாக்கியுள்ளார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி தாக்கிக் காயம் விளைவித்தது ஒரு உடல்ரீதியான குடும்ப வன்முறையாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

34.**நான்காம் நிகழ்வு:** நான்காம் நிகழ்வு தொடர்பாக, முதலாம் எதிர்மனுதாரர் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, திருமணப் புகைப்படத்தைத் தாமே நெருப்பு வைத்து எரித்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். நல்லபடியாக வாழ வேண்டிய நிலையில் ஏன் அவ்வாறு செய்தார் எனக் கேட்டதற்கு, தமது குடும்பத்தை இழிவாகப் பேசியதற்காகவே எரித்ததாகத் தெரிவித்துள்ளார்.

a) எதிர்மனுதாரர் கூறிய இக்காரணத்தின் உண்மைத்தன்மை குறித்து இந்நீதிமன்றத்தின் முன் தனியாக ஆதாரம் முன்வைக்கப்படவில்லை

என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. எனினும், அக்காரணம் உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், தமது குடும்பத்தை இழிவாகப் பேசினார் என்ற எந்தவொரு காரணத்திற்காகவும், தாமும் தமது மனைவியும் ஒன்றாக வாழ்ந்து வரும் காலகட்டத்திலேயே தமது சொந்தத் திருமணப் புகைப்படத்தைத் தீ வைத்து எரிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தையாக இந்த நீதிமன்றம் கருதவில்லை.

b) திருமணப் புகைப்படம் என்பது தம்பதியினரின் திருமண பந்தத்தையும் அவர்களது ஒன்றிணைந்த வாழ்க்கையையும் குறியீடாகக் குறிக்கும் ஒரு பொருளாகும். அத்தகைய ஒரு பொருளை மனைவியின் முன்னிலையிலோ, மனைவி வாழும் வீட்டிலோ வேண்டுமென்றே தீ வைத்து அழிப்பது, வெறும் ஒரு பொருள் சேதத்தில் மட்டும் முடிவடையாமல், அது திருமண பந்தத்தையே நிராகரிக்கும் ஒரு குறியீட்டுச் செயலாக மனைவியால் உணரப்படக்கூடியது என்பதால், இது நேரடியாக உணர்வுரீதியான மற்றும் மனத்தளவிலான குடும்ப வன்முறையின் வரம்பிற்குள் அடங்குவதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. இது எதிர்மனுதாரர் ஆற்றிய அதீத எதிர்வினையாகவும், திருமண உறவில் விரிசல் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாகவும், முதலாம் மனுதாரரை மனத்தளவில் பாதிக்கக்கூடிய உணர்வுரீதியான குடும்ப வன்முறை நிகழ்வாகவும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

c) ஆகவே, முதலாம் மனுதாரரும் முதலாம் எதிர்மனுதாரரும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்த காலத்தில், மேற்கண்ட உணர்வுரீதியான மற்றும் உடல் ரீதியான

மற்றும் மனரீதியான குடும்ப வன்முறைக்கு முதலாம் மனுதாரர் ஆட்படுத்தப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

35. **குடியிருப்பு உத்தரவு (பிரிவு 19(f)):** மனுதாரர்களுக்கு வசிப்பதற்கு வீடு இல்லாததால் மனுதாரர்கள் வசிப்பதற்கு 1–ஆம் எதிர்மனுதாரர் வீடு ஏற்பாடு செய்ய உத்தரவிடவேண்டும்.

a) மேற்படி இச்சட்டத்தின் பிரிவு 19(1)(f), பொதுவான வீட்டில் மனுதாரர்கள் அனுபவித்து வந்த அதே அளவிலான தங்குமிடத்தை, பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பாடு செய்து கொடுக்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடுதல்; அல்லது சூழ்நிலைகள் தேவைப்பட்டால், அத்தகைய தங்குமிடத்திற்கான வாடகையை எதிர்மனுதாரரே செலுத்துமாறு உத்தரவிடுதல் போன்ற பரிகாரங்களை வழங்க வழிவகுக்கிறது.

b) மேற்படி பரிகாரம் தொடர்பான சாட்சியங்களைப் பரிசீலனை செய்யும்போது, முதலாம் மனுதாரரின் தாயார் துணி தேய்க்கும் தொழில் செய்து வருவதாகவும், தந்தை மருத்துவமனையில் வேலை செய்து வருவதாகவும், மேலும் முதலாம் மனுதாரரின் பெற்றோர்கள் வாடகை வீட்டில்தான் உள்ளனர் என்பதையும், மனுதாரர்கள் தங்கள் பெற்றோரை நம்பியே வாழ்கின்றனர் என்பதையும் முதலாவது எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையின்போது ஒப்புக்கொண்டுள்ளார். தனது மனைவியுடனும் மகனுடனும் இணைந்து வாழ்ந்த காலத்தில் குடியிருந்த வீடு போன்ற வசதிகளுடன் கூடிய வீட்டில் அவர்கள் வசிக்க ஏற்பாடு செய்வது முதலாவது எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வ கடமையாகும்.

c) இந்நிலையில், முதலாவது எதிர்மனுதாரர் மாதம் ரூ.30,000/—வரை வருமானம் ஈட்டி வருவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அதற்கான ஆவணங்கள் எதுவும் இம்மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், தான் மெஷின் ஆபரேட்டராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும், அதன் மூலம் மாதம் ரூ.14,000/— மட்டுமே தனக்குச் சம்பளமாகக் கிடைப்பதாகவும் முதலாவது எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையின்போது ஒப்புக்கொண்டுள்ளார்.

d) மேற்படி முதலாவது எதிர்மனுதாரரின் வருமானம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணச் சாட்சியங்கள் எதுவும் இல்லாத சூழ்நிலையில், அவரே தெரிவித்த ஒப்புதலின்படி ரூ.14,000/— தற்போதைய வருமானமாக இருப்பதாகவும், அதனை உண்மையை மறைத்துக் கூறப்பட்ட பொய்யான தொகையாகக் கருத வேண்டும் எனும் அளவிற்குக் குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் எதுவும் குறுக்கு விசாரணையின்போது நிரூபிக்கப்படவில்லை. எனினும், திருமணத்திற்கு முன்பாக மாதம் ரூ.30,000/—வரை வருமானம் ஈட்டி வந்ததாகவும், தற்போது உடல்நலக் குறைவின் காரணமாக அவ்வளவு வருமானம் ஈட்ட இயலவில்லை எனவும் முதலாவது எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையின்போது தெரிவித்துள்ளார். எனினும், குறிப்பிடத்தக்க எந்தவொரு மருத்துவக் குறைபாடும் இருப்பதாக இந்த நீதிமன்றத்தில் அவர் எச்சங்கதியும் தெரிவிக்கவில்லை; மேலும், அத்தகைய குறைபாட்டால் தனக்கு ஏதேனும் பணிச் செயலிழப்பு ஏற்பட்டதாகவும் எவ்வித ஆதாரமும்

முன்வைக்கப்படவில்லை. இச்சூழ்நிலையில், தனக்கு மாதம் ரூ.30,000/– வரை வருமானம் ஈட்டும் தகுதி முன்பு இருந்தது என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியையும், தற்போதைய குறைவான வருமானத்திற்கு நம்பகமான காரணம் நிரூபிக்கப்படவில்லை என்ற சங்கதியையும் இணைத்துப் பார்க்கும்போது, தற்போது இப்பகுதியில் நிலவும் பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில், எதிர்மனுதாரர் செய்வதாகக் கூறும் பணிக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய குறைந்தபட்ச ஊதியமாக ரூ.30,000/– இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகின்றது. திருமணத்திற்கு முன் ரூ.30,000/– வருமானம் இருந்ததாகவும், தற்போது ரூ.14,000/–மட்டுமே சம்பாதிப்பதாகவும் கூறப்பட்ட சங்கதி, இவ்வழக்கின் பொருட்டு மட்டுமே முன்வைக்கப்பட்ட கூற்றாகவே இந்த நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், முதலாவது எதிர்மனுதாரர் ஒவ்வொரு மாதமும் ரூ.30,000/–க்குக் குறையாமல் சம்பாதித்து வருகிறார் என இந்த நீதிமன்றம் அனுமானிக்கின்றது.

e) மேலும், முதலாவது எதிர்மனுதாரருக்குச் சொந்தமாக வீடு உள்ளது என மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின்போது தெரிவிக்கப்பட்ட சங்கதி எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. இச்சூழ்நிலையில், முதலாவது எதிர்மனுதாரரின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு, மனுதாரர்கள் வசிப்பதற்கு அவரது சொந்த வீட்டைப் போன்றே தனியாக ஒரு வீடு வாங்கிக் கொடுக்குமாறு உத்தரவிடுவது நியாயமானதாக இருக்காது என

இந்த நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், முதலாவது எதிர்மனுதாரருக்குச் சொந்தமாக வீடு இருந்தபோதிலும், தனது கணவர் வசித்து வரும் அந்த வீட்டில் தனக்கும் வசிக்க இடம் வேண்டும் என மனுதாரர்கள் தங்களது மனுவில் குறிப்பிடவில்லை. மேற்படி குடும்ப வன்முறை நிகழ்வுகள் நிலவிய பின்னணியிலும், தொடர்ந்து ஏழு வருடங்களாக மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களை விடுத்துத் தனியாக வசித்து வருகின்றனர் என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளின் அடிப்படையிலும், மனுதாரர்கள் அத்தகைய பரிகாரத்தை மனுவில் கோராமல் இருந்திருக்கலாம் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே எனினும், இது மனுதாரர்களின் மனுவாக்கத் தேர்வாகும்; இதை இந்த நீதிமன்றம் தனியாக அங்கீகரிக்கவோ மறுக்கவோ தேவையில்லை.

f) மனுவில் கோரப்பட்டவாறு, மனுதாரர்கள் தங்கள் பெற்றோருடன் வாடகை வீட்டில், அவர்களது பராமரிப்பில் வசித்து வருவதைக் கருத்தில் கொண்டும், முதலாவது எதிர்மனுதாரர் மாதம் ரூ.30,000/− வருமானம் ஈட்டுவதாக இந்த நீதிமன்றம் மேற்கண்டவாறு அனுமானித்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மேற்படி வாடகைத் தொகைக்கு முதலாவது எதிர்மனுதாரர் மாதம் ரூ.2,000/− (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) நிலையான தொகையை பங்களிப்பாகச் செலுத்த வேண்டும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி தொகை, மனுதாரர்களின் பெற்றோர் தற்போது வசித்து வரும் வீட்டிற்குச் செலுத்தும் வாடகைத் தொகையையும், முதலாவது எதிர்மனுதாரரின் மேற்கண்ட வருமானத்தையும் கருத்தில் கொண்டு

நியாயமான தொகையாக இந்த நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

36.**பண நிவாரண உத்தரவு (பிரிவு 20)** : இந்த மனுவின் இரு மனுதாரர்களின் உணவு, ஆடை மற்றும் மருத்துவச் செலவுகளுக்காகவும், இரண்டாவது மனுதாரரின் கல்விச் செலவுகளுக்காகவும், மாதந்தோறும் ரூ.20,000/- முதலாம் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுத்தரும் வகையில், பிரிவு 20-ன் கீழ் பணநிவாரண உத்தரவு வழங்கப்பட வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

37.மேற்படி மனுதாரர்களுக்கு நியாயமாக ஏற்படக்கூடிய உணவு, ஆடை மற்றும் மருத்துவச் செலவுகள் தொடர்பான எவ்வித ஆவணங்களும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இரண்டாவது மனுதாரர் தற்போது என்ன படிக்கிறார், எந்தப் பள்ளியில் படிக்கிறார், அவருடைய கல்விச் செலவுக்கு எவ்வளவு தொகை ஆகிறது என்பது தொடர்பாகவும் மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. இச்சூழ்நிலையில், தற்போது இப்பகுதியில் நிலவும் பொருளாதார மற்றும் விலைவாசி ஏற்ற இறக்கங்களைக் கருத்தில் கொண்டு, மனுதாரர்களுக்கு நியாயமாக ஏற்படக்கூடிய உணவு, ஆடை, மருத்துவச் செலவுகள் மற்றும் இரண்டாவது மனுதாரரின் கல்விச் செலவுகள் ஆகியவற்றை இந்த நீதிமன்றம் மதிப்பிட வேண்டியுள்ளது.

38.முதலாவது எதிர்மனுதாரரின் வருமானம் தொடர்பாக மேலே பிரிவு 19(1)(f) பரிகாரத்தைப் பரிசீலிக்கும்போது இந்த நீதிமன்றம் ஏற்கெனவே விரிவாக ஆராய்ந்து, அவர் மாதம் ரூ.30,000/-க்குக் குறையாமல் சம்பாதித்து வருகிறார்

என அனுமானித்துள்ளது. மேற்படி கண்டறிதலை இப்பரிகாரத்தைப் பொறுத்தும் இந்த நீதிமன்றம் அப்படியே பின்பற்றுகின்றது.

39.மேற்படி நிலைநிறுத்தப்பட்ட மாத வருமானமான ரூ.30,000/—ஐயும், அதன் பின்னர் நியாயமாக ஏற்படக்கூடிய சம்பள உயர்வையும் கருத்தில் கொண்டு, மனுதாரர்களுக்கு ஏற்படக்கூடிய உணவு, ஆடை, மருத்துவச் செலவுகள் மற்றும் இரண்டாவது மனுதாரரின் கல்விச் செலவுகள் ஆகியவற்றிற்கான தொகையாக, முதலாவது எதிர்மனுதாரர் பிரதி மாதம் ரூ.6,000/— செலுத்த உத்தரவிடுவது நியாயமானதாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

**இழப்பீட்டு உத்தரவு (பிரிவு 22)**

40.மேலும், இந்த வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் கேட்கப்பட்டுள்ள மற்றொரு பரிகாரமாவது, முதலாம் எதிர்மனுதாரர் முதலாம் மனுதாரரைத் திருமணம் செய்துகொண்டு, எவ்வித நியாயமான காரணமும் இன்றி நிராகரித்து வரும் நிலையில், முதலாம் மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும் உடல்ரீதியான துன்புறுத்தல்களுக்கும் இழப்பீடாக முதலாம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ.5,00,000/— இழப்பீட்டுத் தொகையாக வழங்க உத்தரவிட வேண்டும் என்பதாகும்.

a) மேற்படி மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரின் குடும்பச் சூழ்நிலைகளை இந்த நீதிமன்றம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இருதரப்பினருமே நல்ல வசதி வாய்ப்புகள் கொண்டவர்கள் என்பதற்கான

சான்றுகள் எதுவும் இல்லை. முதலாம் மனுதாரரின் பெற்றோர்கள் சாதாரண வேலை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைப் பயன்படுத்தி வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர். அதே நேரம், எதிர்மனுதாரரும் டையிங் மெஷின் ஆபரேட்டராக பணிபுரிந்து மாதம் ரூ.30,000/– வரை சம்பாதித்து வருகிறார் என நிரூபணமான சங்கதிகளையும் இந்த நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது. எதிர்மனுதாரரின் இம்மாதவருமானம் மிதமான அளவிலானதாக இருப்பதால், மனுதாரர் தரப்பு கோரிய ரூ.5,00,000/– எனும் தொகையானது எதிர்மனுதாரரின் தற்போதைய வருவாய்த் திறனுடன் நியாயமான தொடர்பில்லாத, மிகைப்படுத்தப்பட்ட கோரிக்கையாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

b) மேலும், முதலாம் எதிர்மனுதாரர், குழந்தை பிறந்த பின்னர் கடந்த ஏழு ஆண்டுகளாகத் தனியாகத் தமது பெற்றோர் பராமரிப்பில் வாழ்ந்து வருகிறார் என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியையும் இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. மேலும், முதலாம் எதிர்மனுதாரரைக் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது, குழந்தை பிறந்தவுடன் தமது மனைவி குழந்தையை அழைத்துச் சென்று ஏழு ஆண்டுகள் ஆகியுள்ள நிலையிலும், தமது மனைவியின் வாழ்வாதாரத்திற்குத் தாம் பணம் செலவிடவில்லை என்றும், தமது கைபேசியில் தம்மை மனைவி தடை செய்திருந்ததால் அவ்வாறு பண உதவி செய்யவில்லை என்றும், தமது மகன் எந்தப் பள்ளியில் படிக்கிறார் என்ற விபரம் கூடத் தமக்குத் தெரியாது என்றும், தம்மிடம் பேசுவதே இல்லை என்றும் முதலாம்

எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை இந்த நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது.

c) மேலும், ஒன்றாக வாழ்ந்த காலத்தில் மேற்கண்டவாறு மனதை நோகடிக்கும் வகையில் நிகழ்ந்த நான்கு குடும்ப வன்முறை நிகழ்வுகளையும் இந்த நீதிமன்றம் இழப்பீடு தீர்மானிப்பதில் அடிப்படைக் காரணிகளாக எடுத்துக்கொள்கிறது. இவற்றுள், மருத்துவமனை செல்லும் அளவிற்குச் சண்டையிட்டுக் காயம் ஏற்படுத்திய நிகழ்வு உடல்ரீதியான தீங்கை நேரடியாக விளைவித்தது என்பதால், அது எஞ்சிய நிகழ்வுகளைக் காட்டிலும் அதிக தீவிரத்தன்மை கொண்டதாக நீதிமன்றம் கருதுகிறது. சாலையில் செல்பவர்களுடன் செல்கிறாயா எனக் கேட்பது, கைபேசியைப் பிடுங்கிச் சந்தேகப்பட்டு உடைப்பது, நண்பர்களுடன் பேசக்கூடாது எனத் தடை செய்வது ஆகியவை உணர்வுரீதியான மற்றும் சுதந்திரத்தடையான குடும்ப வன்முறையாக இடைநிலைத் தீவிரத்தன்மை கொண்டவையாகவும், திருமணப் புகைப்படத்தை எரித்தது குறியீட்டு ரீதியான உணர்வுரீதியான பாதிப்பாகவும் இந்நீதிமன்றத்தால் மதிப்பிடப்படுகிறது.

d) ஆகவே, மேற்கண்ட காரணிகளை ஒன்றிணைத்துப் பரிசீலனை செய்யும்போது, அதாவது, எதிர்மனுதாரரின் மிதமான மாத வருவாய்த் திறன், நான்கு நிகழ்வுகளிலும் வெளிப்படும் வேறுபட்ட தீவிரத்தன்மை, மற்றும் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த மன உளைச்சல் ஆகியவற்றை ஒப்பிட்டு நோக்கும்போது, மனுதாரர் தரப்பு கோரிய ரூ.5,00,000/- எனும்

தொகையானது எதிர்மனுதாரரின் வருவாய்த் திறனுக்கு ஏற்புடையதாக இல்லை என்பதால், அதற்குப் பதிலாக நியாயமான, செலுத்தத்தக்க தொகையாக இருமனுதாரர்களுக்கும் இணைந்து ரூ.50,000/– முதலாம் எதிர்மனுதாரர் வழங்கக் கடமைப்பட்டவர் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

## முடிவு

முடிவாக, மேற்கண்ட காரணங்கள் மற்றும் கண்டறிதல்களின் அடிப்படையில், இந்த நீதிமன்றம் பின்வருமாறு இறுதி உத்தரவிடுகிறது:

1. **சீர்வரிசைப்பொருட்களை திருப்பி அளிக்கும் உத்தரவு:** சீர்வரிசைப் பொருட்களைத் திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகக் கோரப்பட்ட பரிகாரம் (பிரிவு 19(8)) தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. **குடியிருப்பு உத்தரவு:** மனுதாரர்கள் வசிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய குடியிருப்பு உத்தரவைப் (பிரிவு 19(1)(f)) பொறுத்தவரை, முதலாவது எதிர்மனுதாரர் மனுதாரர்கள் தற்போது வசித்து வரும் வாடகை வீட்டிற்கான வாடகைத் தொகைக்கு மாதம் **ரூ.2,000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)** என்ற நிலையான தொகையைப் பங்களிப்பாகச் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

3. **பண நிவாரண உத்தரவு:** பண நிவாரண உத்தரவைப் (பிரிவு 20) பொறுத்தவரை, முதலாவது எதிர்மனுதாரர் இருமனுதாரர்களின் உணவு, ஆடை, மருத்துவச் செலவுகள் மற்றும் இரண்டாவது மனுதாரரின் கல்விச் செலவுகள்

ஆகியவற்றிற்காக மாதந்தோறும் **ரூ.6,000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்)** செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

4. **நிலுவைத் தொகை:** மேலும் மேற்படி மொத்த தொகையான **ரூ.8,000/-த்தை** இந்த மனு தாக்கல் செய்த தேதியில் இருந்து தற்போதைய தேதி வரை கணக்கிட்டு இன்றிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் எனவும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

5. **இழப்பீட்டு உத்தரவு:** இழப்பீட்டு உத்தரவைப் (பிரிவு 22) பொறுத்தவரை, முதலாவது எதிர்மனுதாரர் இருமனுதாரர்களுக்கும் இணைந்து ஒரு முறையாக **ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)** இழப்பீடாக வழங்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

6. மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்ட மாதாந்திரத் தொகைகள் **ரூ.8,000/-த்தை** ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதிக்குள், முதலாம் மனுதாரரின் வங்கிக் கணக்கில் அல்லது நேரடியாக, முதலாவது எதிர்மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

7. இழப்பீட்டுத் தொகையான **ரூ.50,000/-** இவ்வாணையின் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும்.

8. மேற்படி தொகைகள் செலுத்தப்பட்டதற்கான உரிய ஒப்புகை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

9. மேற்கண்ட இச்சட்டத்தின் **பிரிவு 19(7)-ன் படி,** உத்தரவுகளை அமல்படுத்தவும் கண்காணிக்கவும், **கருமலைக்கூடல் காவல்துறை ஆய்வாளருக்கு**

இவ்வாணையின் நகல் அனுப்பப்பட வேண்டும்; தேவைப்பட்டால் மேற்படி உத்தரவுகளை அமல்படுத்துவதில் தமது உரிய பங்கை அவர் ஆற்ற வேண்டும்.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN
Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.08.10 19:38:38 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,மேட்டூர் (முகூபொ).**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

ம. சா. 1 திருமதி.தேன்மொழி

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

ம. சா. ஆ.1 திருமண அழைப்பிதழ்

ம. சா. ஆ.2 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல்

ம. சா. ஆ.3 திருமண புகைப்படம்

ம. சா. ஆ.4 1ம் மனுதாரரின் ஆதார் அடையாளஅட்டை நகல்

ம. சா. ஆ.5 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–**

எ.ம. சா. 1 திரு.மெய்யழகன்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–**

எ.ம. சா. ஆ.1 புகைப்படம்

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.08.10 19:38:44 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2 ,மேட்டூர் (முசுஉபொ).**